TNRM010018292024

முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் நாள் செவ்வாய்கிழமை

**O.S.No.62/2024**

**CNR No: TNRM01-001829-2024**

****

1) கமலா
2) கோகிலா
3) நூருல்காவாஸ்
4) அபிராமி ..... **வாதிகள்**

**/எதிர்/**

ஆனந்தசிவா ..... **பிரதிவாதி**

இவ்வழக்கானது 13.08.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது வாதிகள்தரப்பில் வழக்கறிஞர் திரு.N. பாலாஜி B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை அழைத்தும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டார். வாதிகளை அழைத்தும் ஆஜரில்லாத நிலையில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்துக்களில் வாதிகளுக்குரிய 4/5 பாகத்தை பிரித்துக்கொள்ளும் வகையில் முதல்நிலைத்தீர்ப்பாணை வழங்கும்படிக்கும், முதல்நிலை தீர்ப்பாணையின்படி தாவாச் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 4/5 பங்கை நயமிளப்பம் வைத்து பிரித்துவிட சமூகம் கோர்ட், ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்து அதனடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்புவிக்கும்படிக்கும், தாவா சொத்துக்களில் வாதிகளின் கூட்டனுபவத்தை பிரதிவாதி யாதொரு வகையிலும் தடையிடைஞ்சல் செய்யக்கூடாதென சாஸ்வத இன்ஜங்சன் பரிகாரம் வழங்கியும், இவ்வழக்கிற்காகும் செலவுத்தொகையை பிரதிவாதியே

TNRM010018292024

செலுத்தும்படிக்கும் தீர்ப்புச் செய்யும்படி வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது.

வாதிகளை அழைத்தும் ஆஜரில்லை. வாதிதரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் செய்யப்படவில்லை. எனவே இவ்வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

<u>உபயதரப்பு சாட்சிய சான்றாவணங்கள் இல்லை</u>.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**

**இராமநாதபுரம்.**

**O.S.No.62/2024**

**சீரான/வரைவு/தீர்ப்புரை**

**நாள்: 13.08.2024.**